**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.21/2024 - PW-12**

| | |
|---|---|
| Name | திரு. சங்கர் |
| Husband/Father Name | ரவி |
| Village /Area | மருதம்பாக்கம் |
| Taluk | வாலாஜா |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 31 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 05.03.2026.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். சாட்சி மில்டன் எனது ஊர்க்காரர். நான் மில்டனுடன் ஒரு ஆண்டு வேலை செய்து வந்தேன். நான் மருதம்பாக்கத்திலிருந்த தாகம் தண்ணீர் கம்பனி(விஷ்னு Water plant)ல் ஓட்டுநராக வேலை செய்து வந்தேன். அப்போது அங்கு பொன்னை உதவி ஆய்வாளர் வந்து மில்டன் தெரியுமா என்று கேட்டார் தெரியும் என்று சொன்னேன். பொன்னை அனைகட்டு அருகே கொலை நடந்த விவரம் பற்றி தெரியுமா என்று என்னை கேட்டார் நான் தெரியாது என்று கூறினேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

12.04.2014ம் தேதி பொன்னை ஆற்று திருவிழாவுக்கு நானும் எனது நண்பர் மில்டனும் செல்ல இருந்தோம். அப்போது தாகம் வாட்டர் கம்பனியில் மில்டனின் சம்பளம் ரூ.1500/– வாங்கி வர சொன்னதாகவும் நான் அந்த பணத்தை வாங்கி வந்து மில்டனிடம் கொடுத்ததாகவும் அப்போது மில்டன் நானும் நண்பர்களும் வசூர் பேருந்து நிறுத்தமிடம் தண்ணீர் அடித்தும் ஜாலியாக பிரியாணி சாப்பிட்டதாகவும் அனைவரும் திருவிழாவை சுற்றி பார்த்ததாகவும் வெகு நேரம் ஆகிவிட்டதால் வீட்டிற்கு போக நினைத்து நான் எழுந்து ரோட்டு பக்கம் போனதாகவும் இரவு சுமார் 2.30 மணிக்கு

பேருந்துக்காக வசூர் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்ததாகவும் அப்போது மில்டன் நண்பர் விஜயும் பல்சர் வண்டியில் வருண்ராஜ், ராஜ சேகர், சரண்ராஜ் ஆகியோருடன் ராணிப்பேட்டை போனதாகவும் நான் அவர்கள் வண்டியை நிறுத்தி அவர்களுடன் வண்டியின் பின்னால் அமர்ந்து எனது மருதம்பாக்கத்தில் எனது வீட்டிற்கு வந்து இறங்கி விட்டதாகவும் பிறகு அவர்கள் ராணிப்பேட்டை சென்று விட்டதாகவும் ஒரு வாரம் கழித்து மில்டன் தன் வண்டியை வருண்ராஜிடம் கொடுத்ததாகவும் அந்த வண்டியில் வருண்ராஜ் ஊரை சுற்றி விட்டு வண்டியை திரும்ப கொடுக்க மருதம்பாக்கம் வந்து மில்டனை கேட்ட போது மில்டன் தண்ணீர் சப்ளை செய்ய வேலைக்கு போயிருப்பதாக கேள்விபட்டு 02.05.2014ம் தேதி வசூர் பேருந்து நிறுத்தமிடம் சரண்ராஜ் வண்டியை ஓட்ட நடுவில் விஜயும் பின்னால் வருண்ராஜ் உட்காந்து கொண்டு வந்து கொண்டிருந்ததாகவும் பொன்னை ஆய்வாளர் அவர்கனை பிடித்து விசாரித்ததாகவும் பொன்னை ஆற்று திருவிழாவில் ஒருவரை கொலை செய்த விவரத்தை இடத்தையும் காட்டுவதாக சொன்னதாகவும் போலீஸ் விசாரணையின் போது வருண்ராஜ் இது சம்மந்தமாக சொன்ன போது தான் எனக்கு கொலை செய்த சம்பவம் தெரிய வந்ததாகவும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு ஆஜர் எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜர் ஆகாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.05 18:26:36 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.